**விவசாய விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகம் -2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாய விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான

கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடனான தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 88 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் ஒதுக்கீடு (Provisions) நிதி நிலைமைக்கூற்றில் வேறாக | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களில் அட்டுறு செலவினம் மற்றும் ஒதுக்கீடுகளின் கீழ் கணக்காய்வுக் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வுக் கட்டணங்களுக்காக ஒதுக்கீடு ரூபா 1,195,310 அட்டுறு செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டணங்களுக்காக ஒதுக்கீடு உள்ளடக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 02 கணக்கு மீதிகளில் அதிகரிப்பு ரூபா 30,253,403 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 30,436,559 என தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | இந்த அட்டுறு செலவினங்களில் உள்ள கணக்காய்வு கட்டண ஒதுக்கீட்டுக் குரிய 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணங்கள் அளவும் சீராக்கப்பட்டுள்ளது. வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கிடைக்க வேண்டிய முதலீட்டு அளவின் தேறிய காசு பாய்ச்சலை கழித்ததன் பின்னர் காசுப் பாய்ச்சல் வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளில் காசு பாய்ச்சல் கொண்டு வரப்பட்டுள்ளது | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

---------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------ | ------------------------------------ | ---------------- |
| (அ) ஆண்டிற்கான விரிவுரைக் கட்டணங்களின் பெறுமதி சரியாக இனங்காணப்படாமல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,785,100 தொகையான விரிவுரைக் கட்டணங்கள் மற்றும் ரூபா 355,078 ஆன பரீட்சைக் கட்டணங்கள் என்பன மீளாய்வாண்டின் | வெளிவாரி விரிவுகைக் கட்டணங்கள் அட்டுறுவாக்கும் போது இரண்டு ஆண்டுகள் மாத்திரம் எடுக்கப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டின் போது 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் அட்டுறு அளவு மாத்திரம் கணக்குகளுக்கு கொண்டு | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் உள்ள இவ்வாறான நிலைமையொன்றை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி வரை கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அப்பெறுமதிகள் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நேர்ந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போதும் 29,773,075 விரிவுரைக் கட்டணங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | வரப்பட்டிருந்தன. எனினும் 2017 ஆம் ஆண்டின் போது 2016 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறு வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களில் எஞ்சிய ரூபா 6,785,100 வெளிவாரி விரிவுரைக் கட்டணங்கள் மற்றும் ரூபா 355,078 ஆன பரீட்சைக் கட்டணங்கள் முன்னைய ஆண்டின் இலாபத்திலிருந்து சீராக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள், ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய அல்லது இடமாற்றம் பெற்றுச்சென்ற நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் போது ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 273,381 தொகை சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன்பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தொகை குறித்த செலுத்த வேண்டிய நிறுவனத்தின் பெயரில் கணக்குகளுக்கு மாற்றல் மேற்கொள்ளப் படாததுடன் குறித்த நிறுவனங்களுக்கு அப்பணத்தை கொடுப்பனவு செய்யுமாறு அறிவித்தல் மற்றும் நினைவூட்டல் மேற் கொள்ளப்படுகின்றது. அந்நிறுவனங்களிலிருந்து பெறக்கூடிய தொகை இக்கணக்கு மூலமும் தீர்வுசெய்யப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் முறையான வெளிப்படுத்தல் மேகொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் மூலதனச் செயற் திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டை மிகைத்து செலவிடப்பட்டதன் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்படாத 6 மூலதன மானிய கணக்குகளில் ரூபா 4,962,610 தொகை ஆன வரவு மீதிகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளின் போது நிறுவகத்தின் மிகை பணத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட மூலதன சொத்துக்களில் பெறுமதியும் கணக்குகள் ஊடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் பெறுவனவுகளாக அரசின் மானியங்கள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. அதனால் பெறுனவுகளை விட கொடுப்பனவுகள் அதிகரித்த | நிறுவகத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உரிய பிரகாரம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

சந்தர்ப்பங்களில் வரவு மீதியும் பெறுவனவுகள் அதிகரித்து கொடுப்பனவு குறைவினுள் செலவு மீதிகள் எஞ்சியிருந்தன.

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **விடயம்** | **நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி** | **அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி** | **வேறுபாடு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| ---------------- | ---------------- | ---------------- | -------------- | -------------------- | ------------------ |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| (அ) மீண்டெழும் / மூலதன மானியம் | | | | ஏற்றுக் கொள்கின்றேன். கணக்குகளின் பிரகாரம் மீதிகள் சரியானது. நிதிக் கூற்றுக்களின் சரியான தரவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அட்டவணைகள் நாளதுவரையாக் கப்படாமை காரணமாக வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அட்டவணை சரி செய்யப்பட்டு கணக்காய்விற்காக இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது | பயன்பாட்டுப் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| கட்டிடங்கள் | 2,651,798 | 2,670,145 | 18,347 | | |
| வாகனங்கள் | 297,595 | 505 | 297,090 | | |
| நில அலங்காரம் | 198,715 | 279 | 198,436 | | |
| உபகரணங்கள் | 8,000 | - | 8,000 | | |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் சீர்செய்யப்பட்ட நிதிக் கூற்றின் மீதிகள் | | | | மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நூலக மற்றும் விஞ்ஞான வைப்புக்கள் அளவில் அவர்களின் பதிவு கால எல்லை முடிவடைந்தமையால் நிதிக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் | முன்னைய ஆண்டின் மீதிகள் முன்கொண்டு வரப்படல் மற்றும் அம்மீதிகளுக்கு மேற்கொள்ளப்படும் சீராக்கங்கள் சீராகவும் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| வெளிவாரி விரிவுரைக் கட்டணங்கள் | 16,864,875 | 23,649,975 | 6,785,100 | வருமானத்திற்கு எடுக்கப்படும் |
| மின்சாரக் கட்டணங்கள் | 223,118 | 456,205 | 233,087 | |
| விசேட சேவைகள் தொழில் துறை மற்றும் ஏனைய (கணக்காய்வுக் கட்டணங்கள்) | 1,421,830 | 903,855 | 517,975 | |
| விஞ்ஞான வைப்புக்கள் | 57,000 | - | 57,000 | |
| நூலக வைப்புக்கள் | 7,859,188 | 7,678,688 | 180,500 | |
| பெறவேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் | 18,716,513 | 29,184,569 | 10,468,056 | |

### 1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி சகல மேலதிக பணங்கள், நிதி அமைச்சரின் முன் அனுமதியுடனேயே நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் குறுங்கால வைப்புக்கள் என்பவற்றில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் அங்கீகாரமின்றி 2018 ஆம் ஆண்டில் ரூபா 71,000,000 தொகை நிலையான வைப்புக்கள முதலீடு செய்யப்பட்டிருந்தது. | ஒரு மாதத்தின் இறுதியில் காணப்படும் திரட்டிய மீதி மாதத்தின் செலவினம் மேவுகை செய்யப்பட்ட போதியளவில் சேமிப்பொன்று காணப்பட்டால் மாத்திரம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்படும். | 2013 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமுலமான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பெற வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் | 8,726,933 | அட்டவணைகள் | 150 ஆம் இலக்க நாட்குறிப்பிற்குரியதாக கிடைக்க வேண்டிய | பயன்பாட்டுப் பதிவேடுகள் நாளதுவரையாகவும் |

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணங்கள் | பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் பதிவுக் கட்டணங் களுக்குரிய அட்டவணைகள் நாட்குறிப்புடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | சரியாகவும் பேணப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 92,115,759 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 89,663,796 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,451,963 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் அரச மானியங்கள் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 30,000,000 ஆல் அதிகரித்தமை மற்றும் ரூபா 18,340,635 ஆல் உள்ளக உழைப்பு அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டு முதல் 2018மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கும் போது 2014 ஆம் ஆண்டில் ரூபா 98,364,643 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 181,850,190 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களிடமிருந்து பெறவேண்டியதாக இனங்காணப்பட்ட ரூபா 295,900 தெகையான பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் ரூபா 822,200 தொகையான பதிவுக் கட்டணங்கள் மற்றும் | 2018 ஆம் ஆண்டின் போது பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டியதாக இனங்காணப்பட்ட பாடநெறிக் கட்டணங்கள், | உரிய கவனத்துடன் பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| ஏனைய பெறுவனவுகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 153 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் ரூபா 1,118,100 தொகை முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிவுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் என ரூபா 1,118,100 மற்றும் பணத்தை மாணவர்கள் செலுத்தியிருந்த போதும் முகாமைத்துவ தகவல் முறைமைக்கு உள்ளடக்கப்படாதிருந்தமை மற்றும் கணக்கு பிரிவிற்கு கோரும் தகவல் கிடைக்காமையால் செலுத்தப்பட்ட பணமொன்றாக கிடைக்க வேண்டிய வருமானக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 03 சந்தர்ப்பங்களில் ரூபா 278,997 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரசாயனப் பொருட்கள் இருப்பு புத்தகங்களுக்கு உள்ளடக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு இரசாயனப் பொருள் கொள்வனவின் போது நிறுவகம் பிரதான இரசாயன பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப வசதிகள் இல்லாமை காரணமாக அவ்வாறு கட்டளையிடுகின்ற இரசாயனப் பொருட்கள் விவசாய பீடத்தின் உரிய ஆய்வுகூடத்திற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுவதுடன் அவை புத்தகங்களுக்கு உட்படுத்தப்படுவதில்லை. | நிதிப்பிரமாணம் 507 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) ரூபா 2,100,000 உடன்படிக்கை பெறுமதியான கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று வடிவமைக்கும் செயற்திட்டங்களுக்காக | அவ்வாறே மேற்படி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தாமதம் தொடர்பாக உரிய வழங்குனரிடமிருந்து | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வது தொடர்பில் கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | Science Land Information (Pvt) Ltd. நிறுவனங்களுக்கு ரூபா 1,050,000 தொகை கொடுப்பனவொன்று செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரித்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பல்கலைக்கழக பதவியணியினரின் வேலை நிறுத்தம் மற்றும் கணக்கீட்டு முறைமை எமது நிறுவகத்திற்கு பொருந்தும் வகையில் தயாரிக்கும் போது எதிர்பார்க்கப்பட்ட போதும் கூடிய காலம் எடுப்பதன் காரணமாக குறித்துரைக்கப்பட்ட திகதி முடிவுறுத்த முடியாதென அவர் குறிப்பிட்டிருந்தார். | செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டு வரை அட்டுறு செலவின கணக்குகளில் காண்பிக்கப்படாத வெளிவாரி விரிவுரைக் கட்டணங்கள் ரூபா 799,025 ஆன 24 உறுதிச்சீட்டுக்கள் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வெளிவாரி விரிவுரைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கல்வி சார் கடமைகள் தொடர்பாக உறுதிச்சீட்டுக்கள் தாமதித்து கோருவதாக அவதானிக்கப்பட்டதுடன் இந்நிலைமையை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நிறுவகத்தில் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உள்ள கல்வி குழு, கூட்டிணைப்புக் குழு, முகாமைத்துவக குழு கூட்டங்களுக்கு சமர்ப்பித்து அதன் பிரகாரம் கல்விசார் பதவியணியினருக்கு தெரியப்படுத்தி குழுவின் பரிந்துரைகளை பின்பற்றி விரிவுரைகளை நடாத்துவதை உறுதிப்படுத்துவதன் மூலம் அதனை அறிவித்து உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கும் தாமதங்களை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை யொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,272,410 பெறுமதியான 05 ஆராய்ச்சி நிதியங்கள் மீளாய்வாண்டில் எவ்வித கொடுக்கல் வாங்கலொன்று மேற்கொள்ளப் | IDRC Grant - இச்செயற் திட்டத்தின் ஒரு கட்டத்திற்காக கிடைத்த பணத்திலிருந்து | நிதியத்தை நோக்கங்களை அடைந்து |

| | | |
|---|---|---|
| படாமல் மீதிகள் முன்கொண்டு வரப்பட்டு வந்தன. | எஞ்சிய பணமாகும். இங்கு 2018 ஆம் ஆண்டில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் குறித்த நிறுவனத்தின் பரிந்துரையின் பிரகாரம் கூட்டிணைப்பாளரால் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன் அடுத்த கட்டம் செயற்பாட்டு நிலைமையிலுள்ளது.<br><br>ஏனைய மீதிகள் HETC திட்டத்தின் எஞ்சிய பணமாக இருப்பதுடன் கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வதற்காக செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்குரிய சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமல் நலன்புரி சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | நடைமுறை நிலைமை யினைக் கருத்திற் கொண்டு எமது நிறுவகத்திற்குரிய சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லும் செயற்பாடு நலன்புரிச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டது. | காணப்படும் வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் எதிர்வரும் ஆண்டிற்குரிய பாதீட்டு மதிப்பீடு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அங்கீகரித்துக் கொள்ளப்படல் வேண்டும். எனினும் நிறுவகத்தினால் 2018 நிதியாண்டின் பாதீட்டு மதிப்பீடு அவ்வாண்டு இறுதியில் அதாவது 2018 நவம்பர் 12 இல் உள்ளவாறு திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்தவத்தின் கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய செலவுப் பதிவேடு ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப் பட்டதன் பின்னர் அதற்கு அண்மித்தாக திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பாதிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 26 செலவின விடயங்களில் 21 சதவீதம் முதல் 171 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்ட நடைமுறை நிலைமையின் அடிப்படை யில் இவ்வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன. | செயற்படுத்தக்கூடிய வகையில் மதிப்பீடு தயாரித்து அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |